2004 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 95, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

95—

வனவிலங்கு சரணாலயம்

***6967—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையில், வனவிலங்கு சரணாலயம் அமைப்பதற்கு அரசு தேவையான திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) கோதையாறு மேல்தங்கல் அருகிலுள்ள முத்துக்குளிவயலில் விலங்குகள் சரணாலயம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்துக் காப்புக் காடுகளை உள்ளடக்கிய பகுதிகளை, கன்னியாகுமரி வன உயிரின சரணாலயமாக்க, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்பேரில், 16–07–2002–ல் Notification *வெளியிடப்பட்டுள்ளது.* Final notification *வெளியிடுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், கோதையாறு மேல்தங்கல் அருகிலுள்ள முத்துக்குளிவயல் பகுதியும் இவ்வறிவிக்கையில் அடங்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 96, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

96—

வனவிலங்குப் பகுதி

***36541—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வனவிலங்குப் பகுதியென மத்திய அரசால் தடை விதிக்கப்படாத வனப் பகுதிகளை, மலைவாழ் மக்கள் சங்கத்தினருக்கு "சிறு வன மகசூல்" அனுமதி வழங்க, அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறிவிக்கப்பட்ட சரணாலயப் பகுதிகளைத் தவிர்த்து, ஏனைய வனப் பகுதிகளில் விளையும் சிறு வனப் பொருட்களை இலவசமாகச் சேகரிக்கும் உரிமையை மலைவாழ் இனத்தவருக்குச் சில நெறிமுறை மாற்றங்களுடன் 29–4–2003-ல் மாண்புமிகு முதலவர் அம்மா அவர்களின் அரசு ஆணை வழங்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

97—

வீட்டு வசதி வாரியம்

***37482–திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி நகரப் பகுதியில் வீட்டு வசதித் துறைமூலம் அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டித் தர, நடப்பாண்டில் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அவிநாசி நகரப் பகுதியில் அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.